
# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 49

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

ஓவியம் : ரவி பேலட்



## சமமாகக் கருதாத சாதி அமைப்பு!

1911-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், சென்னை மாகாணத்தில் இருந்த 4 கோடியே 18 லட்சத்து 70 ஆயிரத்து 160 நபர்களில் 31 லட்சத்து 30 ஆயிரத்து 250 பேர் கல்வியறிவு பெற்றவர்களாகக் கணக்கிடப்பட்டனர். அதாவது, 1000-க்கு 75 பேர் கல்வியறிவு பெற்றிருந்தனர். அவர்களில் 69 பேர் ஆண்கள். 6 பேர் பெண்கள். 1901-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விவரங்களுடன் ஒப்பிட்டால், 1911-இல் 6, லட்சத்து 93 ஆயிரத்து 46 பேர் கூடுதலாகக் கல்வியறிவு பெற்றிருந்தனர்.

வழங்கப்பட்ட கல்வித்தரம் எப்படி இருந்தது என்பதை, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி சார்ட்ரஸ் மோலோனி பின்வருமாறு கூறுகிறார்: “இப்போது வழங்கப்படும் ஆரம்பக் கல்வி சந்தேகத்திற்கு இடமின்றி மோசமானது. குறைந்த ஊதியம் பெறும் திறமையற்றவர்கள், குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் வேலை செய்கின்றனர். கல்வியறிவு பெற்றிருந்தாலும், இவர்களில் பெரும்பாலானவர்களைப் படித்தவர்கள் என்று கற்பனையில்கூட கூற முடியாது. குறைவான ஊதியத்திற்குப் பணிசெய்யவேண்டிய அலுவலகப் பணியாளர்களுக்கான திடீர் தேவை அதிகரிப்பு காரணமாக இவர்கள் கல்வியியல் துறைக்குள் இடம்பிடித்தனர். இதனால் பாதிக்கப்பட்டவற்றில் முக்கியமானதும் முதன்மையானதும் கற்பித்தல் துறையாகும்.

கல்வி ரீதியாக, தென்னிந்தியாவில் பிராமணர்கள் முன்னிலை வகித்தாலும், அதனால் பிராமணர்களுக்கு நன்மை விளைகிறதா என்பதை ஆராய வேண்டும். படித்த பிராமணர் ஒருவர், சில தேர்வுகளில் வெற்றிபெற்று, ஆங்கிலம் பேசவும் எழுதவும் முடியும் என்பதை நிறுவியதால், கல்வி கற்பித்தல் அல்லது எழுத்தர் தொழில் செய்ய இயலுகிறது. இருப்பினும், கிடைக்கும் ஊதியம், அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் போதுமானதாக இல்லை” என்று பிராமணர்கள் தன்னிடம் கூறியதாக சார்ட்ரஸ் மோலோனி பதிவு செய்துள்ளார்.

கல்வி கற்றதினால் பெற்ற வேலைவாய்ப்புகள் மூலம், குறைவான ஊதியமே கிடைக்கிறது என்று அங்கலாய்த்துக் கொள்ளும் பிராமணர்கள் கல்வி கற்பதை நிறுத்தினார்களா? இல்லை. மாறாக அதிகப்படுத்தினார்கள். கல்வியறிவு தேவைப்படுகிற பாரம்பரியத் தொழில்களைத் தவிர, மற்ற அனைத்துப் பாரம்பரியத் தொழில்களிலிருந்தும் பிராமணர்கள் விலகிக் கொண்டனர். அதன் விளைவாக, கல்விச்சந்தையில் கூடுதல் இடங்களைப் பிடித்துக் கொண்டனர். கல்வி பெறுவதில் கவனத்தை அதிகப்படுத்தியும், பாரம்பரியத் தொழில்களைப் புறக்கணித்தும், முன்னேற்றப் பாதையில் செல்ல முயன்ற அதே வேளையில், தமது சொந்த சமூகநலனைப் பாதுகாக்கப் பிணைப்புச் சங்கிலிகளை உருவாக்க முனைந்தனர்.

விளைவு என்னவெனில், பிராமணர்கள் கல்வித்துறையில் முழு ஆதிக்கம் செலுத்தினர். 1911-இல் 1000-க்கு 371 பிராமணர்கள் கல்வியறிவு பெற்றிருந்தனர். பிராமணர்களுடன் ஒப்பிடுகையில், அகமுடையார் (102), அருந்ததியர் (5), கள்ளர் (78), கம்மாளர் (133), மறவர் (69), பள்ளர்(19), பறையர்(14), வன்னியர்(163), வண்ணார் (32), வெள்ளாளர் (130) உள்ளிட்ட மற்றவர்கள் குறைந்த கல்வியறிவு பெற்றிருந்தனர்.

ஆண்களுடன் ஒப்பிடுகையில், அனைத்துச் சாதி பெண்களின் கல்வியறிவு நிலை, மிக மோசமாக இருந்தது. அதில் பிராமணப் பெண்களில் கல்வியறிவு, மற்ற சாதிப் பெண்களின் நிலையை விட, மேம்பட்டு இருந்தது. உதாரணத்திற்கு, 1000-க்கு 654 பிராமண ஆண்கள் கல்வியறிவு பெற்றிருந்தனர். ஆனால், வெறும் 93 பிராமணப் பெண்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தனர். மற்ற சாதிப் பெண்களின் நிலை இதை விட மோசம். அருந்ததியர் பெண்கள் (1000-க்கு 0.7), கள்ளர் (4), கம்மாளர் (8), மறவர் (3), பள்ளர் (0.8), பறையர் (1), வன்னியர் (16), வண்ணார் (2), வெள்ளாளர் (18) என்ற அளவில் கல்வியறிவு மோசமாக இருந்தது.

சென்னை மாகாணத்தில் வாழ்ந்த மக்களில் 40.7% தமிழ் மொழியும், 37.7% தெலுங்கு மொழியும், மலையாளம் 7.4%, ஒரியா 3.8%, கன்னடம் 3.7%, ஹிந்துஸ்தானி 2.3%, மீதமுள்ள 4.4% மக்கள் ஏனைய மொழிகளைப் பேசினர். சமஸ்கிருதமும் இந்த 4.4%-க்குள் அடக்கம். 1901-ஆம் ஆண்டு முதல் 1910-ஆம் ஆண்டு வரை வெளியான வெவ்வேறு மொழிகளில் மொத்த புத்தகங்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால், கல்வித்துறையை ஆக்கிரமித்திருந்த பிராமணர்களின் ஆதிக்கம் புலப்படுகிறது. அந்தப் பத்தாண்டுகளில் தமிழில் 4 ஆயிரத்து 820, தெலுங்கில் 3 ஆயிரத்து 255, மலையாளத்தில் 719 புத்தகங்கள் வெளியாகின.

**இந்தச் செயல்முறைகள் பலனளித்தனவா? பலனளிக்கவில்லை என்பதே ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை அறிக்கைகள் கூறும் பதில்.**

### பிராமணருக்கு மட்டுமே சமஸ்கிருதம்

இவற்றோடு ஒப்பிடுகையில், மிக மிகக் குறைந்த அளவில் பேசப்பட்ட மொழியான சமஸ்கிருதத்தில் வெகு சில புத்தகங்களே வெளியாகியிருக்கவேண்டும். ஆனால், சமஸ்கிருதத்தில் 1,752 புத்தகங்கள் வெளியாகின. சமஸ்கிருதம் பேசுபவர்கள் மிக மிகக் குறைவு. ஆனால், சமஸ்கிருதத்தில் வெளியான புத்தகங்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். இது எவ்வாறு சாத்தியம்? இரண்டு சாத்தியக் கூறுகளே உள்ளன.

ஒன்று, தமிழர்கள் அதிகம் இருந்தாலும், தமிழ் படித்தோர் விகிதம் குறைவாக இருந்தது. இரண்டு, சமஸ்கிருதம் பேசுவோர் குறைவாக இருந்தாலும், சமஸ்கிருதம் படித்தோர் மிக மிக அதிகமாக இருந்தனர். ஆகையால்தான் சமஸ்கிருதத்தில் வெளியான புத்தகங்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். பிராமணர்கள் மட்டுமே சமஸ்கிருதம் பயின்றனர் என்பதும் உண்மை. அதுபோல கல்வியறிவில் பிராமணர்கள் தனித்து நின்றனர் என்பது கண்கூடு.

தாழ்ந்து கிடந்த பிராமணரல்லாத சாதியினருக்குத் தம் தாழ்நிலை புரியாமல் இல்லை. ஆனால், பிராமணர்களின் மேலாதிக்கத்தை எதிர்க்க ஒன்றுபடத் தயாரில்லை. ஏனெனில் சாதி என்ற எண்ணம், இந்து வாழ்க்கை முறையின் வேர்களை ஆழமாகத் தாக்கியிருந்தது. எனவே, தமது சாதியினை, உயர்ந்த சாதி என்று காட்ட, ஒவ்வொரு சாதியினரும் விரும்பினர். தம்மைப் பிராமணர்களுக்கு இணையான அல்லது உயர்ந்த நிலைக்கு உயர்த்தியும், மற்ற சாதியினரைத் தமக்குத் தாழ்வாக தாழ்த்தியும் காட்ட விரும்பினர்.

### வடமொழி நூல்களில் உதாரணம்

1900-களில் வெளிவந்த ‘வருண சிந்தாமணி’ உள்ளிட்ட பல்வேறு நூல்களைத் தனது, ‘தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துகள்’ எனும் நூலில் மேற்கோள் காட்டும் பேராசிரியர் நா.வானமாமலை பின்வருமாறு கூறுகிறார்: “தமிழ்நாட்டின் நிலப்பிரபுக்கள், சிறு நிலவுடைமையாளரில் பலர் சைவ வேளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமக்கு மேலுள்ள வகுப்பாரோடு தங்களைச் சமமானவர்களாகவும், கீழுள்ளவர்களைத் தங்களுக்குத் தாழ்ந்தவர்களென்றும் கருதி, அவர்களை அவ்வாறே வைத்திருக்கவும் விரும்பினார்கள். இவர்கள் சாதி அமைப்பு முறையை எதிர்க்கவில்லை. அதில், தங்களுடைய பதவியை உயர்த்திக்கொள்ளவே விரும்பினார்கள். இதற்காகத் தமிழ் நூல்களையும் வேதங்களையும் பயன்படுத்தினார்கள்.

நில உடைமையாளர்கள் மிகுதியாயிருந்த சாதிகள், ‘ஆரிய வேதம் வேறு என்றும் திராவிட வேதம் வேறு’ என்றும் கூறி, தங்களுக்குத் திராவிட வேதத்தில் உயர்ந்த இடமிருப்பதாக நிலைநாட்ட முயன்றனர். தாங்கள் சுகவாழ்க்கை வாழ்வதற்காக உழைப்பதற்குத் தொழிலாளிகள் தேவையாதலால் வருணாசிரம முறையையும் ஒப்புக்கொண்டு, தங்களை வைசியர் எனவும், தொழில் செய்து வாழ்வோரைச் சூத்திரர் எனவும், அவர்கள் தங்களிலும் தாழ்ந்தவர்கள் என்றும் எழுதினார்கள். ஆனால், மேலுள்ளவர்களுக்குத் தாங்கள் சமம் என்று காட்ட, வைசியன் ஆட்சிக்கு வரலாம் என்று கூறும் கருத்துகளைப் பிற்கால வடமொழி நூல்களிலிருந்து மேற்கோள் காட்டினார்கள்.

இந்தச் செயல்முறைகள் பலனளித்தனவா? பலனளிக்கவில்லை என்பதே ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை அறிக்கைகள் கூறும் பதில்.

...குரல் ஒலிக்கும்

---

## இந்தியாவின் முதல் காமிக்ஸ் நூலகம்!



விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதியில் ‘காமிக்ஸ் நூலகம்’ திறக்கப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே இப்படியொரு காமிக்ஸ் நூலகம் அமைக்கப்படுவது இதுவே முதல்முறை. அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் நூலகத்தைத் திறந்து வைப்பதாக இருந்த நிலையில், திறப்பு விழாவிற்கு வந்த சிறுவர்களையே வைத்து, நூலகத்தைத் திறந்துவைத்தார் அமைச்சர்.

இங்கு குழந்தைகளைக் கவரும் வகையில், வண்ணப் படங்களுடன் கூடிய ‘காமிக்ஸ் புத்தகங்கள்’ படிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்குப் பிடித்த பிரபலமான கார்ட்டூன் கதாபாத்திரங்கள் தொடர்பான கதைகளை நூலகத்திற்கு வந்து படித்து மகிழலாம். குழந்தைகள் வண்ணம் தீட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் தாங்கள் வண்ணம் தீட்டிய படங்கள் தொடர்பான கதைகளை, அவர்களே கற்பனை செய்து கூறலாம்.

குழந்தைகள் அமருவதற்காக, சிறிய அளவிலான இருக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. படுத்துக்கொண்டே கதை படிப்பதற்காக, சிறிய அளவிலான தலையணைகளுடன் கூடிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள கணினியில் டிஜிட்டல் வடிவிலும் புத்தகங்களைப் படிக்கலாம். புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்வதற்காக வைஃபை வசதியும் செய்யப்பட்டுள்ளது. காலை 9 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் 6.30 வரையும் நூலகம் செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களின் அபரிமிதமான வளர்ச்சியால், வாசிப்புப் பழக்கத்தில் இருந்து விலகி நிற்கும் சிறார்களுக்கு, இத்தகைய காமிக்ஸ் நூலகங்கள் வித்தியாசமான அனுபவத்தைத் தரும். வரவேற்கத்தக்க முயற்சி!

---

## ஃப்ளாஷ்பேக்





போடி காமராஜ்

### தலைவரிடம் பெற்ற வாழ்த்து!

2016-ஆம் ஆண்டு, சென்னை, ஆயிரம்விளக்குப் பகுதியில், பகுதிச் செயலாளர் அண்ணன் மா.பா.அன்புதுரை அவர்கள் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றினேன். நிகழ்ச்சி முடிந்த அடுத்தநாள் காலை, அண்ணன் அன்புதுரை அவர்களின் ஏற்பாட்டில் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை அறிவாலயத்தில் சந்தித்தேன். முதல்நாள் இரவு ஆயிரம்விளக்குப் பகுதியில் உரையாற்றியதை தலைவர் அவர்களிடம் கூறி, ஊக்கம் பெற்றதுடன், தேர்தல் நிதியாகவும் 1,000 ரூபாய் வழங்கினேன். தலைவர் தளபதி அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் என்னைப் பாராட்டினார்.

**– போடி காமராஜ்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**மதுரை மாநகர் மாவட்ட இலக்கிய அணித் துணை அமைப்பாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### கழகத்தை கவனித்த ஏ.ஜி.!


1953-இல் மும்முனைப் போராட்டத்தில் அறிஞர் அண்ணாவும், கழக முன்னோடிகளும் சிறையில் அடைக்கப்பட்ட போது, வெளியே இருந்து கழக நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பை, ‘ஏ.ஜி.’ என்றழைக்கப்பட்ட ஏ.கோவிந்தசாமியிடம் ஒப்படைத்தார் அண்ணா. பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த கழகத்தினரை சந்தித்து உற்சாகமூட்டிய அவர், சிறையில் இருந்த தலைவர்களோடு கலந்துரையாடி, மேற்கொண்டு ஆற்றிட வேண்டிய கழகப் பணிகளுக்கான கருத்துக்களைப் பெற்று செயலாற்றினார்.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

747

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131